**செய்தி வெளியீடு எண்: 723** **நாள்: 29.11.2012**

## <u>பத்திரிகைச் செய்தி</u>

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர் காலிப்பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 2010–2011 மற்றும் 2011–2012 ஆம் ஆண்டிற்கு தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்ட 47 பணிநாடுநர்களுக்கு பணி நியமனக் கலந்தாய்வு.

2010–2011 மற்றும் 2011–2012 ஆம் ஆண்டிற்கு ஆதிதிராவிடர் நலத்துறை உயர்நிலைப்பள்ளிகளில் காலியாக உள்ள உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்திட ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் ஒதுக்கீடு பெறப்பட்டு, ஆதிதிராவிடர் நலத்துறையால் அழைப்பாணை அனுப்பப்பட்ட 47 பணி நாடுநர்களுக்கு எதிர்வரும் 07.12.2012 முற்பகல் 11.00 மணிக்கு ஆதிதிராவிடர் நல ஆணையர் அலுவலகம், எழிலகம் இணைப்பு, சேப்பாக்கம் சென்னை–5 என்ற முகவரியில் ஆணையர் தலைமையில் பணிநியமனத்திற்கான கலந்தாய்வு நடைபெறும். மேற்கண்ட நாளில் சம்பந்தப்பட்ட பணிநாடுநர்களை உரிய சான்றுகளுடன் தவறாது ஆஜராகும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**